# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 02 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.07.05ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம் (கூட்டிணைத்தல்)

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

**மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சமன்பிரிய ஹேரத் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம் (கூட்டிணைத்தல்)

## மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

''மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம்'' என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதனது குறிக்கோள்களையும் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதுவரை இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன், சொல்லப்பட்ட மன்றமானது எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அம்மன்றம் கூட்டிணைக்கப்படுவதற்காக விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் உசிதமானதாகவிருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றத்தைக் கூட்டிணைத்தல்*

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''மன்றம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடு செயயப்படும்) ''மில்கோ பால் உற்பத்தியாளர்கள் மன்றம்'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்

கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும்; அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்; அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவும் சமூக சேவைகள் ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) வெற்றிகரமாக பொருளாதார முயற்சியொன்றாக பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்தலும் அதனால் மன்ற உறுப்பினர்களின் வாழ்கைத் தராதரங்களை உயர்த்துதலும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதலும்;

(ஆ) மன்ற உறுப்பினர்களின் நன்மைக்கென வரையறுக்கப் பட்ட மில்கோ தனியார் கம்பெனியுடன் ஒத்துழைத்தல்;

(இ) உள்ளூர் பால் கைத்தொழிலின் மேம்படுத்தலின் அதனது பங்கேற்றல் ஊடாக நன்மைகளைப் பெறுவதற்கு உறுப்பாண்மைக்கான அவசியமான கட்டமைப்பை உருவாக்குதல்;

(ஈ) தூயதும் உயர் தரத்திலானதுமான பாலை உற்பத்தி செய்வதற்கான எல்லா அவசியமான நடவடிக்கைகளையும்;

(உ) பொருளாதார ரீதியாக வெற்றிகரமானதும் பயனுள்ளதுமான பால் உற்பத்தியை உறுதிப்படுத்த உறுப்பினர்களுக்கு அவசியமான மதியுரையையும் உதவியையும் ஏற்பாடு செய்தலும்; அத்துடன்

(ஊ) வரையறுக்கப்பட்ட மில்கோ தனியார் கம்பெனி ஊடாக பால் விற்பனைக்காக அவசியமான வசதிகளை ஏற்பாடு செய்தலும்.

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக்களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காத வகையிலான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாண சபையின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டிணைக்கப்பட்ட குழு உறுதிப்படுத்துதல்*

**5.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும் நிருவாகித்தலும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தவிசாளர், செயலாளர் உட்பட அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள பேரவை ஒன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற மன்றத்தின் பேரவை, (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்படும் விதிகளுக்கமைய, 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது

பேரவை நியமிக்கப்படும்வரை அல்லது தேர்ந் தெடுக்கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்காலப் பேரவை ஒன்றாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இடைக்காலப் பேரவையானது, இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகம் மற்றும் முதலாவது சபையின் உறுப்பினர்களின் நியமனம் அல்லது தேர்தலுக்கான விதிகளை ஆக்குவதற்கு தத்துவம் கொண்டதாதல் வேண்டும்.

(இ) இடைக்காலப் பேரவையின் ஏதேனும் முடிபு, அத்தகைய கூட்டங்களில் சமுகமாகவிருக்கும் அதனது உறுப்பினர்களில் பெரும்பான்மையோரினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) முதலாவது பேரவை, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, பேரவையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போஷகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன்பின்னர் மீளநியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத்தேர்ந் தெடுக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகல், உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், பேரவை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஆள் எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக்காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவிவகித்தல் வேண்டும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்

**6**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள் களை எய்துவதற்கு பின்வரும் கருமங்களைச் செய்யவும் புரியவும் நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்:-

(அ) மில்கோ தவிசாளரின் சம்மதத்திற்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல், புனரமைத்தல் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் உசிதமானதெனக் கருதக்கூடியவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும் புரிதலும் அல்லது நிறைவேற்றுதலும்;

(இ) பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக் கொடை களையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெறுதலும்:

ஆயின், பேரவையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும், நிதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சினது வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பேரவையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான இடப்பரப்புகளில் வேலைக் குழுக்கள் மற்றும் விவசாயிகள் சங்கங்களைத் தாபித்தலும் பேணுதலும்;

(உ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாசனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக்கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடுதலும், கைமாற்றுதலும் , வாங்குதலும், விற்றலும், வழங்குதலும் மற்றும் பேரவையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், தொழிற்படுத்துதலும், பேணுதலும், மூடிவிடுதலும்;

(ஊ) பேரவை தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங் களுக்காக உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை முதலீடு செய்தலும்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் ஏதேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்பை அல்லது ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனத்தைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக் கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரிதலும் மற்றும் நிருவகித்தலும்;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக்கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்துதலும், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்களையும், படிகளையும், பணிக்கொடைகளையும் அவர்களுக்குச் செலுத்துதலும்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் இணைதலும் ஒருங்கிணைதலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக அலுவலர்களுக்கும் சேவையாளர்களுக்கும் பயிற்சியளித்தலும்; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமானவாறான அல்லது உசிதமானவாறான எல்லா அத்தகைய சட்டபூர்வமான காரியங்களையும் செய்தலும்.

**7.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மை கொண்டும், பின்வரும் எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அவற்றுள் எவற்றுக்காகவும், இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகள்

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்தலும், அவர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவிநீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலனவான கட்டணங்களும்;

(ஆ) பேரவையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் பதவிதாங்குநர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் மற்றும் ஊதியங்களும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் மற்றும் சேவையாளர்கள் என்போரின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் மற்றும் ஊதியங்களும்;

(ஈ) பேரவையினது அல்லது அதன் ஏதேனும் உபகுழுவினது கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துவதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், அவற்றின் நிகழ்ச்சிநிரலும், அவற்றிக்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) பேரவையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும்;

(எ) பேரவையினால் தாபிக்கப்பட்ட வேலைக் குழுக்கள் மற்றும் விவசாயிகள் சங்கங்கள் தொடர்பிலான தத்துவங்கள், பணிகள், கடமைகள் மற்றும் ஏதேனும் கருமங்கள்; அத்துடன்

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொது அலுவல்களை முகாமைசெய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும், கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப் பட்டதைப் போன்ற அதேபோன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன்மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தேதியிலிருந்து பயனுக்கு வருதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமைந் தோராதல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**8**. பேரவையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும். இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக் கப்பட்ட குழுவின் நிதியம்*

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப்பாவணக் கொடை, நன்கொடை, ஒப்படைப்பணம், உதவு தொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், 6 (இ) என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்கில் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மில்கோ பால் உற்பத்தியாளர்கள் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வரவில்

காணப்படுகின்ற எல்லா அத்தகைய பணத்தொகைகளும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியத்திற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(4) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்றவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமை பெற்றவொரு கணக்காய்வாளரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது அத்தகைய தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் சான்றுறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ‘‘தகைமைபெற்ற கணக்காய்வாளர்’’ என்பது-

(அ) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர்

ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர்; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) பேரவையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கையை, 10 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் கணக்காளர் தலைமையதிபதியினால் அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சமூக சேவைகள் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் மன்றத்திற்குச் செலுத்தப்படற்பாலவையுமான தனிசுகள்*

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கும் மன்றத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்*

**13.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதி விருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனங்கள் யாவும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்கவுள்ள தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்*

**14.** எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும், பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் என்ற வகையில் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை*

**15.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, தவிசாளர் மற்றும் செயலாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை

எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை, பேரவையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான பேரவையின் அத்தகைய பதவி தாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்*

**16.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர் களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக் கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களை யுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களி னால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசின் உரிமைகளைப் பேணல்*

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.